[1978 செப்டம்பர் 8

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

* வினா எண் 96—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தையும் தனித்தனி நிர்வாக அமைப்பாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 10-00]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட அளவிற்கு இப்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நிர்வாக அமைப்புகளின்கீழ் வருகின்றன. வட மாநிலங்களில் இருக்கின்ற ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் தனித்தனி நிர்வாக அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்று கேள்விப்படுகிறோம். அந்தக் கொள்கையினை ஏற்று இந்த அரசும் ஒவ்வொரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தையும் தனித்தனியான நிர்வாக அமைப்பின்கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தனித்தனியாக உள்ள நிர்வாக அமைப்புகளின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஆனால் இன்று இருக்கக்கூடிய சட்டம் அதாவது 1959-வது ஆண்டின் சட்டப்பிரிவின் கீழே எந்த உட்பிரிவுகளையும் அமைப்பதற்குரிய அதிகாரம் இல்லை. ஆகவே 1959-வது ஆண்டின் சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்து அதற்குப் பின்னாலே இது பற்றி யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேரள மாநிலத்திலிருந்து தேக்கு மரங்கள் வாங்கல்

* வினா எண் 97—திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொள்ளாச்சி மரம் அறுக்கும் தொழிற்சாலைக்கு கேரள மாநிலத்திலிருந்து மரங்கள் வரவழைக்கப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள மரங்கள் வரவழைக்கப்படுகின்றன ?